அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 366

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7
1987, மே 5ஆம் திகதி

அமைச்சுச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
கூட்டுத்தாபனத் தலைவர்கள் அனைவர்க்கும்.

1980 யூலையில் பதவி வெறிதாகிச் சென்ற
உத்தியோகத்தர்கள் / பணியாளர்கள்

1980 யூலையில் பதவி வெறிதாகிச் சென்ற அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனப் பணியாளர்கள் தொடர்பில் இதன் கீழ் விபரிக்கப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. மீளப்பதவிக்கமர்த்தப் பொருத்தமான ஆளுல் வெற்றிடம் இன்மை காரணமாக மீளப்பதவியில் அமர்த்தப்படாதோர்.

(அ) இந்த வகுதி சார்ந்த, பதவி வெறிதாக்கத் தேதியின் வண்ணம் ஓய்வூதியம் பெறத்தகுதியான ஆள் (அ-து- ஆகக் குறைந்தது 10 வருட சேவையுள்ளவர்) அவர்தம் சேவைக் காலத்தோடு 5 வருடம் சேர்த்து இளைப்பாறும் உரிமை வழங்கப் பெறுவர்.

(ஆ) இந்த வகுதியைச் சார்ந்த ஆள் பதவி வெறிதாக்கத் தேதியின் வண்ணம், ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவராயின் அவர்க்கு பணிக் கொடைக் கொடுப்பனவுக்கமைந்த வழமையான விதிகளின் கீழ், பணிக் கொடை ஒன்று வழங்கப்பட வேண்டும். அத்தகைய ஆளுக்கு, அவர்தம் சேவையுடன் மூன்று (3) ஆண்டுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அவ்வாறு நீடிக்கப் பெற்ற காலத்துக்கு அல்லது பத்து (10) வருட காலத்துக்கு, இவற்றுள் எது குறைவானதோ, அதற்கு, அமையப் பணிக்கொடை கணிக்கப்படும்.

..2

03. மீளப் பதவியிலமர்த்தப் பொருத்தமற்றோர்-

(அ) இந்த வகுதியைச் சார்ந்த, பதவி வெறிதாக்கத் தேதியின் வண்ணம் ஓய்வூதியம் பெறத்தகுதியுள்ள ஆள், இளைப்பாறும் உரிமை வழங்கப் பெறுவர். ஆனால் அத்தகைய ஓய்வூதியத்துக்கான சேவைக்காலம், அவர்தம் பதவி வெறிதாக்கக் காலத்தில் இருந்த சேவைக்கால அளவினதாகவே அமையும்.

(ஆ) இந்த வகுதியைச் சார்ந்த ஆள், பதவி வெறிதாக்கத் தேதியின் வண்ணம், ஓய்வூதியம் பெறத்தகுதியற்றவராயின், பணிக்கொடை வழங்கலுக்கமைந்த வழமையான விதிகளின் கீழ் அவர்க்குப் பணிக்கொடை ஒன்று (அதாவது சேவை ஆண்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு மாத வேதனம்) வழங்கப்படல் வேண்டும்.

04. "மீளப்பதவியிலமர்த்தப் பொருத்தமானோர்", 'மீளப்பதவியிலமர்த்தப் பொருத்தமற்றோர்' என்ற தொடர்களின் விளக்கத்துக்கு அனைத்து அமைச்சுச் செயலாளர்களுக்கும் 1980.12.03ஆந் தேதியிட்ட அமப 410/80ஆம் இல. செ/அமைச்சரவைக் கடித மூலம் வழங்கப் பெற்ற, அமைச்சரவையங்கீகாரம் பெற்ற வழிக்காட்டிகளைப் பார்க்க.

05. (1) கொடுக்கத்தகுமிடத்து ஓய்வூதியக் கணிப்பு, 1984.12.13க்கு முன் ஏற்புடைய அடிப்படையில் அமைதல் வேண்டும்.

(11) ஓய்வூதியப் பெறத்தகுதியுடைய ஆள் திரட்டு ஓய்வூதியம் பெறுதற்கும் உரித்துடையவராவர்.

(111) பதவி வெறிதாக்கிய ஆளுக்கு ஓய்வூதியம் வழங்குதற்கான வழங்கிலுள்ள திட்டத்தின் கீழ் ஏலவே ஓய்வூதியம் பெற்றுவரும் ஆள் தொடர்பில் மேற்போந்த திட்டம் அனுகூலம் ஆனதெனக் காணப்படுமிடத்து, அவரது ஓய்வூதியம் திருத்தியமைக்கப்படும்.

(1V) பதவி வெறிதாக்கத் தேதியின் வண்ணம் பதவியில் உறுதி செய்யப்படா நிலையினரான ஆள் ஒருவர், ஓய்வூதியமேனும், பணிக்கொடையேனும் பெறும் உரித்துடையவராகார்:

(V) அரசாங்க கூட்டுத்தாபனங்கள், ஏனைய நிறுவனங்களில் பணியாற்றியவர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனமே அதன் திட்டத்தை வகுத்துக் கொள்ளல் வேண்டும். எவ்வாறாயினும், ஓய்வூதிய பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான மேற்போந்த திட்டத்தைக் கைக்கொள்வது விரும்பத்தக்கது.

06. இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் வண்ணம் கொடுபடத்தகு ஓய்வூதியம் 1987 ஏப்ரல் 1ஆம் தேதி முதல் பயனுறுவதாகும்படி, வழங்கப்பட வேண்டும்.

07. ஓய்வூதியம்சார் விளக்கப் பிரமாணம் இதன்வண்ணம் திருத்தியமைக்கப்படும்.

ஒப்பம்: டி.பி.ஜ.பி.எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.